Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, ஏப்ரல் 27, 2025 | இதழ் 14

# போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் குடியரசுத் தலைவர் பங்கேற்பு

சென்னை, 27 ஏப்ரல் 2025: வாட்டிகன் நகரில் உள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் இன்று (ஏப்ரல் 26, 2025) நடைபெற்ற போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டார். மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, சிறுபான்மையினர் நலத்துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் மற்றும் கோவா சட்டப்பேரவை துணை சபாநாயகர் திரு ஜோசுவா டி சோசா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



# ஹரியானாவின் நூஹ் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் இரங்கல் தெரிவித்துள்ளார்

சென்னை, 27 ஏப்ரல் 2025: ஹரியானாவின் நூஹ் பகுதியில் இன்று ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். "நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது" என்று திரு மோடி கூறியுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் அலுவலகம் பதிவிட்டிருப்பதாவது: "ஹரியானாவின் நூஹ் பகுதியில் ஏற்பட்ட விபத்து மிகவும் வேதனையளிக்கிறது. துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எனது இரங்கல்கள். இந்தக் கடினமான நேரத்தில் கடவுள் அவர்களுக்கு வலிமை அளிக்கட்டும்.

இதனுடன், விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன். நிவாரணம் மற்றும் மீட்புக்கு மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது: பிரதமர்

# வடகிழக்கு மாநிலங்களுடன் மண்டல மின்துறை மாநாடு

சென்னை, 27 ஏப்ரல் 2025: மின்சாரத் துறையின் மண்டல மாநாடு ஏப்ரல் 26 அன்று கேங்டாக்கில் சிக்கிம் முதலமைச்சர் திரு பிரேம் சிங் தமாங் மற்றும் மத்திய மின்சாரம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர் லால் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடகிழக்கு மாநிலங்களின் பிரதிநிதிகள், மத்திய எரிசக்தித் துறை செயலாளர், எரிசக்தி அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் தமது உரையில், வளர்ந்த நாடாக மாறுவதை நோக்கிய பயணத்தில் நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு, எதிர்காலத்திற்கு தயாராக, நவீன மற்றும் நிதி ரீதியாக சாத்தியமான எரிசக்தித் துறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

வடகிழக்கு மாநிலங்களின் மின்சாரத் துறை தொடர்பான குறிப்பிட்ட சவால்கள் மற்றும் தீர்வுகளை அடையாளம் காண இந்த மண்டல மாநாடு உதவும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

யூற்போதைய மின் தேவைகளை பூர்த்தி செய்வதில் 0.1% என்ற சிறிய இடைவெளி இருந்தபோதிலும், எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முயற்சிகள் தொடர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். 2014 முதல், மின் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது, மேலும் அனல், நீர், அணு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உள்ளிட்ட பல்வேறு உற்பத்தி முறைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்கை அடைய சுற்றுச்சூழல் கவலைகளை நிவர்த்தி செய்வது மற்றும் புதைபடிவம் அல்லாத சக்தியை நோக்கி நகர்வது அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

தாக்குதல் நடத்தியவர்கள், சதி செய்தவர்களுக்கு கற்பனை செய்ய முடியாத அளவுக்கு தண்டனை வழங்கப்படும்.

இந்தியாவின் தன்னம்பிக்கையை யாராலும் அசைக்க முடியாது. பயங்கரவாதிகளை இருந்த இடம் தெரியாமல் ஒழிப் போம். இவ்வாறு அவர் பேசினார்.




# இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக எஃகு உள்ளது: மத்திய அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி

சென்னை, 27 ஏப்ரல் 2025: மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு ஜி கிஷன் ரெட்டி மும்பையில் இன்று எஃகுத் துறை குறித்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் முதன்மையான சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டில் உரையாற்றினார். எஃகு குறித்த சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு, கொள்கை வகுப்பாளர்கள், தொழில் துறை தலைவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தினரிடையே எஃகு துறையின் வளர்ந்து வரும் இயக்கவியல் மற்றும் நிலக்கரித் தொழிலுடனான அதன் இணக்கமான உறவு குறித்து கலந்துரையாடுவதற்கான குறிப்பிடத்தக்க தளமாக செயல்பட்டது.

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு ஜி.கிஷன் ரெட்டி தமது உரையில், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தின் முதுகெலும்பாக எஃகு உள்ளது என்று கூறினார்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள உலகின் மிக உயரமான ரயில்வே பாலமான செனாப் பாலம் முதல், தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பாம்பன் பாலம் வரை, உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இந்தியா எவ்வாறு புதிய உலகளாவிய அளவுகோல்களை அமைத்து வருகிறது என்பதை அவர் எடுத்துரைத்தார். இவை அனைத்தும் எஃகு துறையின் வளர்ந்து வரும் வலிமையால் சாத்தியமாகியுள்ளன. நாட்டின் ளுள்கட்டமைப்பு பயணத்தில் ஒவ்வொரு மைல் கல்லும் எஃகில் உருவாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இது முன்னேறி வரும் ஒரு தேசத்தின் வேகம் மற்றும் அபிலாஷைகளை பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்தியாவின் எஃகுத் துறை சமீபத்திய ஆண்டுகளில் ஈர்க்கக் கூடிய வேகத்தில் வளர்ந்துள்ளது, உலகளவில் இரண்டாவது பெரிய எஃகு உற்பத்தியாளராக நாட்டை நிலைநிறுத்தியுள்ளது என்று அவர் கூறுகிறார். இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக எஃகு விளங்குகிறது என்றால், நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை வலுவான அடித்தளத்தை பிரதிபலிக்கிறது என்று திரு ரெட்டி குறிப்பிட்டார். இரும்புத் தாது, கரி நிலக்கரி, சுண்ணாம்புக்கல் போன்ற முக்கிய மூலப்பொருட்கள் மற்றும் மாங்கனீசு, நிக்கல் மற்றும் குரோமியம் போன்ற அத்தியாவசிய கலவை கூறுகள் கிடைப்பதை உறுதி செய்வது ஒரு பொருளாதார தேவை மற்றும் கட்டாயம் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த நிதியாண்டில் நிலக்கரி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியா சமீபத்தில் ஒரு மைல்கல்லை எட்டியது - இது தேசிய எரிசக்தி பாதுகாப்பை நோக்கிய ஒரு மாற்றத்தக்க படியாகும். இந்தியாவின் மொத்த எரிசக்தி தேவைகளில் கிட்டத்தட்ட 60% மற்றும் அதன் மின்சார உற்பத்தியில் 70% நிலக்கரி தொடர்ந்து உள்ளது என்பதை ஆற்றல் புள்ளி விவரங்கள் 2025 வெளிப்படுத்துகின்றன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், எதிர்காலத்தில் இந்தியாவின் எரிசக்தி மற்றும் தொழில் துறை நிலப்பரப்பில் நிலக்கரி மையமாக இருக்கும் என்று அமைச்சர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

எஃகு உற்பத்தியில் முக்கிய உள்ளீடான கோக்கிங் நிலக்கரி பற்றி குறிப்பிட்ட திரு ரெட்டி, எஃகு உற்பத்தி செலவில் இது கிட்டத்தட்ட 42% ஆகும் என்று சுட்டிக் காட்டினார். இந்தியா தற்போது தனது கோக்கிங் நிலக்கரி தேவைகளில் 85% இறக்குமதி செய்கிறது, இது சர்வதேச விலை ஏற்ற இறக்கம் மற்றும் விநியோகச் சங்கிலி இடையூறுகளுக்கு தொழில் துறையை பாதிக்கக்கூடியதாக ஆக்குகிறது. இதனைச் சமாளிக்கும் விதமாக, இறக்குமதி சார்பு நிலையைக் குறைப்பது, 140 மெட்ரிக் டன் உள்நாட்டு உற்பத்தியை இலக்காகக் கொண்டது.

2030 க்குள் எஃகு தயாரிப்பில் உள்நாட்டு நிலக்கரியை 10% முதல் 30% வரை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட மிஷன் கோக்கிங் நிலக்கரியை அரசு 2021 இல் தொடங்கியது.

# வறுமையை ஒழிப்பதில் இந்தியாவின் வெற்றி

சென்னை, 27 ஏப்ரல் 2025: கடந்த தசாப்தத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாக இந்தியா, 171 மில்லியன் மக்களை தீவிர வறுமையிலிருந்து மீட்டுள்ளது. உலக வங்கி தனது 2025 வசந்த கால வறுமை மற்றும் சமத்துவ அறிக்கையில் வறுமைக்கு எதிரான இந்தியாவின் தீர்க்கமான போராட்டத்தை ஒப்புக் கொள்கிறது. இந்த அறிக்கையின்படி, தீவிர வறுமைக்கு சர்வதேச அளவுகோலான ஒரு நாளைக்கு 2.15 அமெரிக்க டாலர்களுக்கும் குறைவாக வாழும் மக்களின் விகிதம், 2011-12-ல் இருந்த 16.2 சதவீதம் என்பதிலிருந்து 2022-23-ல் வெறும் 2.3 சதவீதம் எனக் கடுமையாகக் குறைந்துள்ளது.

இந்த சாதனை, கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் கவனம் செலுத்திய, உள்ளடக்கிய வளர்ச்சிக்கான மத்திய அரசின் ளுறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நலத்திட்டங்கள், பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான அதிகரித்த அணுகல் மூலம், வறுமை அளவைக் குறைப்பதில் இந்தியா கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. உலக வங்கியின் 2025 வசந்த கால வறுமை மற்றும் சமத்துவ அறிக்கை, இந்த முயற்சிகள் மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையை எவ்வாறு கணிசமாக மாற்றியுள்ளன, நாடு முழுவதும் வறுமை இடைவெளியைக் குறைத்துள்ளன என்பதை னுடுத்துக் காட்டுகின்றன.

உலக வங்கியின் இந்தியாவிற்கான வறுமை மற்றும் சமத்துவ சுருக்கம், தீவிர வறுமையில் கூர்மையான குறைப்பு பரந்த அடிப்படையிலானது என்றும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளை உள்ளடக்கியது என்றும் கண்டறிந்துள்ளது.

கிராமப்புறங்களில், தீவிர வறுமை 2011-12-ல் 18.4 சதவீதம் என்பதிலிருந்து 2022-23-ல் 2.8 சதவீதமாகக் குறைந்தது.

நகர்ப்புறங்களில், அதே காலகட்டத்தில் தீவிர வறுமை 10.7 சதவீதம் என்பதிலிருந்து 1.1 சதவீதமாகக் குறைந்தது

கிராமப்புற மற்றும் நகர்ப்புற வறுமைக்கு இடையிலான இடைவெளி 7.7 சதவீதம் என்பதிலிருந்து 1.7 சதவீதமாக சுருங்கியது. 2011-12 மற்றும் 2022-23 க்கு இடையில் சரிவு விகிதம் ஆண்டுக்கு 16 சதவீதமாகும்.

2011-12 ஆம் ஆண்டில், அதிக மக்கள் தொகை கொண்ட ஐந்து மாநிலங்களான உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் ஆகியவை இந்தியாவின் மிகவும் ஏழைகளில் 65 சதவீதத்தைக் கொண்டிருந்தன.

2022-23 ஆம் ஆண்டு வாக்கில், இந்த மாநிலங்கள் தீவிர வறுமையில் ஒட்டுமொத்த சரிவில் மூன்றில் இரண்டு பங்கிற்கு பங்களித்தன.

நகர்ப்புற வேலையின்மை நிதியாண்டின் முதல் காலாண்டில் 6.6 சதவீதமாகக் குறைந்தது, இது 2017-18 க்குப் பிறகு மிகக் குறைவு.

சமீபத்திய தரவுகள் 2018-19 க்குப் பிறகு முதல் முறையாக ஆண் தொழிலாளர்கள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மாறுவதைக் குறிக்கின்றன,

அதே நேரத்தில் விவசாயத்தில் கிராமப்புற பெண் வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது.

சுயதொழில், குறிப்பாக கிராமப்புற தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் அதிகரித்து, பொருளாதார பங்கேற்புக்கு பங்களிக்கிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு,
ஏப்ரல் 27, 2025

# இந்தியாவில் ஸ்பெக்ட்ரா நிறுவனத்தின் எண்டோலிஃப்ட் எக்ஸ் அறிமுகம். இந்தியாவில் முன்னோடித்துவமாக மைக்ரோஃபைபர் அடிப்படையில் அறுவைசிகிச்சை அல்லாத அழகியல் சிகிச்சை

சென்னை 28, ஏப்ரல் 2025: ஸ்பெக்ட்ரா மெடிக்கல் இந்தியா பிரைவேட் லிமிடெட், இத்தாலி நாட்டைச் சேர்ந்த இஃபோ டோன்டி நிறுவனத்தின் ஒத்துழைப்போடு இந்தியாவில் எண்டோலிஃப்ட் எக்ஸ் என்பதனை இன்று அறிமுகம் செய்திருக்கிறது. சருமத்தை இறுக்கமாக்கவும், கொழுப்பை குறைக்கவும் மற்றும் குறைவான அசௌகரியம் மற்றும் குறைவான ரெக்கவரி காலஅளவுடன் முகம் மற்றும் உடலை சீரமைத்து வடிவமைக்கவும் உதவுவதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு மிக நவீன, அறுவைசிகிச்சை அல்லாத லேசர் சிகிச்சையாக எண்டோலிஃப்ட் எக்ஸ் அறிமுகம் செய்யப்படுகிறது. ஒரு லேசர் சாதனத்துடன் இணைக்கப்பட்ட புத்தாக்கமான கண்ணாடி இழை, மைக்ரோஃபைபர்களை எண்டோலிஃப்ட் எக்ஸ் பயன்படுத்துகிறது.



சென்னையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா நிறுவனத்தின் கார்ப்பரேட் அலுவலகத்தில் எண்டோலிஃப்ட் எக்ஸ்-ன் அறிமுக நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்த புரட்சிகர தொழில்நுட்பத்தை நேரடியாக பார்வையிட வழி வகுத்த இந்நிகழ்வில் சருமவியல் நிபுணர்கள், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், ஊடக பணியாளர்கள் மற்றும் அழகியல் தொழில் துறை வல்லுநர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றனர். பிற சர்வதேச சந்தைகளில் ஏற்கனவே பிரபலமாக திகழும் இச்சிகிச்சை, இப்போது இந்தியாவில் அழகியல் சிகிச்சைகள் வழங்கப்படும் முறையில் மேம்பட்ட மாற்றத்தை உருவாக்க விருப்பது நிச்சயம்.

உலகளவில் அங்கீகாரம் பெற்ற புத்தாக்க கண்டுபிடிப்புளையும், தயாரிப்புகளையும் இந்தியாவின் விரிவடைந்து வரும் அழகியல் சந்தைக்கு கொண்டு வருவதற்கான தனது தொலைநோக்கு இலட்சியத்தை பகிர்ந்து கொண்ட ஸ்பெக்ட்ரா மெடிக்கல் நிறுவனத்தின் நிறுவனரும், தலைமை செயலாக்க அதிகாரியுமான திரு. ராம், கூறியதாவது: "இந்தியாவின் அழகியல் தயாரிப்புகளுக்கான தொழில் துறை மிகப்பெரிய நிலைமாற்றத்தை காணும் நிலையில் இருக்கிறது. இந்த பரிணாம வளர்ச்சியில் எண்டோலிஃப்ட் எக்ஸ் முன்னணியில் இருக்கிறது. மிக குறைவான இடையீட்டு நடவடிக்கையின் மூலம் வியக்க வைக்கும் சிறப்பான விளைவுகளை பெறுவதற்கு இத்தொழில்நுட்பம் திறனளிக்கிறது. அழகு, நம்பிக்கை மற்றும் சௌகரியம் என்ற நவீன இந்தியர்களின் இனப்பண்புகளோடு மிகச் சரியாக ஒன்றிப் போகின்றன."

இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய பிரபல பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர். ஜெயந்தி ரவீந்திரன், சென்னையைச் சேர்ந்த சருமவியல் நிபுணர்கள் டாக்டர். சரண்யா மற்றும் டாக்டர். விக்னேஷ் கார்த்தி மும்பையை சேர்ந்த டாக்டர். பிரியம் பகத் ஆகியோர் பாரம்பரியமான முகப் பொலிவேற்றங்களுக்கு எண்டோலிஃப்ட் எக்ஸ் எப்படி ஒரு திறன்மிக்க மாற்றாக இருக்க முடியுமென்று விளக்கிக் கூறினர். கொலாஜென் -ஐ இயற்கை முறையில் இறுக்கமாக்க இது உதவுகிறது, முக வளைவு மட்டங்களை மேம்படுத்துகிறது மற்றும் கைகள் மற்றும் வயிற்றில் சரும தளர்ச்சிப் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது என்பதை விளக்கி முன்னிலைப் படுத்தினர். நோயாளிகளுக்கு எண்டோலிஃப்ட் எக்ஸ் சிகிச்சையின் மூலம் கிடைத்த உண்மையான விளைவுகளை காட்டுகிற செய்முறை விளக்கத்தை வழங்கும் ஒரு வீடியோ காட்சியும் இந்நிகழ்வில் ஒளிபரப்பப்பட்டது.

யூஃபோடன் நிறுவனத்தைச் சேர்ந்த மிஸ். பியான்கா கொசுலிச் பேசுகையில், "இந்தியாவில் எண்டோலிஃப்ட் எக்ஸ் அறிமுகத்தின் மூலம் அழகியல் செயல்தளத்தில் உண்மையிலேயே ஒரு தனித்துவமான சிகிச்சையை கொண்டு வருவதில் நாங்கள் அளவிலா உற்சாகம் கொள்கிறோம்.

சருமத்திற்கு கீழே ஆழமாகச் சென்று அதனை இறுக்கமாக்கவும், கொழுப்பை குறைக்கவும், கொலாஜென்-ஐ அதிகரிக்கவும் மிக மெல்லிய லேசர் ஃபைபர்களை இது பயன்படுத்துகிறது. இவையனைத்தையும் அறுவைசிகிச்சையின்றி அது செய்கிறது. இச்சிகிச்சையின் மூலம் கிடைக்கும் விளைவுகள் இயற்கையானவை, நீண்ட காலம் நிலைக்கக் கூடியவை மற்றும் குறைவான காலத்திற்குள் கிடைக்கக்கூடியவை; இதன் காரணமாக உடலுக்குள் ஊடுருவல் இல்லாத சிகிச்சைகளை பொறுத்தவரை, நடப்பு நிலையை மாற்றக் கூடியதாக இந்த சிகிச்சை இருக்கிறது" என்று கூறினார்.

உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பால் (எஃப்டிஏ) ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த மருத்துவச் செயல்முறையின் பயன்படுத்தும் முறைகள் மற்றும் பயன்கள் பற்றி ஆழமான தகவலையும், அறிவையும் பங்கேற்பாளர்கள் அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கும் வகையில் நடைபெற்ற கேள்வி & பதில் அமர்வுடன் இந்நிகழ்வு சிறப்பாக நிறைவடைந்தது.

எண்டோலிஃப்ட் எக்ஸ் இப்போது இந்தியாவெங்கிலும் முன்னணி அழகியல் கிளினிக்குகளில் கிடைக்கப் பெறுகிறது.

இதன் உடனடி விளைவுகளுக்காகவும், இயற்கையான சரும மீளுருவாக்கம் மற்றும் உடனடி பலன் ஆகிய சிறப்பியல்புகளுக்காக நன்கு அறியப்படும் இச்சிகிச்சை அறுவை சிகிச்சையை மேற்கொள்ளாமல் தங்களது தோற்றத்தை புதுப்பித்து அழகாக்க விரும்பும் நபர்களுக்கு இந்த சிகிச்சை மிக பொருத்தமானதாகும்.

# மணிப்பால் உயர் கல்வி அகாடமி, மணிப்பால் நல்வாழ்வு மற்றும் ஓய்வு மையத்தைத் திறக்கிறது

சென்னை 28, ஏப்ரல் 2025: மணிப்பால் உயர் கல்வி அகாடமி (எம்ஏஹெச்இ) மணிப்பால், இந்தியாவின் தனித்துவமான மணிப்பால் ஹாஸ்பிஸ் அண்ட் ரெஸ்பைட் சென்டரை (னும்ஹெச்ஆர்சி) திறப்பு விழாவை அறிவித்துள்ளது, இது ஏப்ரல் 30, 2025 அன்று ஆந்திரப் பிரதேசத்தின் மேதகு ஆளுநர் மாண்புமிகு நீதிபதி ஸ்ரீ சையத் அப்துல் நசீர் அவர்களால் முறையாகத் திறக்கப்படும். இது ஜூலை 2025 முதல் மருத்துவ சேவைகளைத் தொடங்கும். எம்ஏஹெச்இ இன் இந்த உயர் சமூக தாக்க முயற்சி முற்றிலும் இலவசம் மற்றும் சிறந்த கருணையுள்ள முழுமையான நோய்த் தடுப்பு சிகிச்சைக்கான ஒரே இடமாக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். இது தீவிரமான மற்றும் வாழ்க்கையை கட்டுப் படுத்தும் நோய்களை எதிர்கொள்ளும்

நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு விரிவான ஹாஸ்பிஸ் மற்றும் ரெஸ்பைட் பராமரிப்பை வழங்கும்.

இந்த வசதி, கஸ்தூர்பா மருத்துவக் கல்லூரி, மணிப்பால் கஸ்தூர்பா மருத்துவமனை மற்றும் இந்திய நோய்த்தடுப்பு பராமரிப்பு சங்கம் உள்ளிட்ட பல கூட்டாளர்களின் ஆதரவுடன் செயல்பட மூலோபாய ரீதியாக திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற நோய்த்தடுப்பு மருத்துவ மருத்துவர்கள், செவிலியர்கள், உளவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் பிற ஆதரவுக் குழு, பல நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பலதுறை குழுவால் சிறப்பு



நோய்த் தடுப்பு சிகிச்சையை வழங்குகிறது. கஸ்தூர்பா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து வெறும் 4.5 கிலோமீட்டர் தொலைவிலும், தேசிய நெடுஞ்சாலை-66 இலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ள மணிப்பால் மருத்துவமனை மற்றும் ஓய்வு மையம் (எம்ஹெச்ஆர்சி), ஸ்வர்ணா நதியின் அமைதியான கரையோரத்தில் அமைந்துள்ள அமைதியான 12 ஏக்கர் பசுமையான வளாகத்தில் அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில் பேசிய எம்ஏஹெச்இ இன் இணை வேந்தர் டாக்டர் எச்.எஸ். பல்லால், "கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு அப்பால், பச்சாதாபம், கண்ணியம் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றின் மதிப்புகளை உள்ளடக்கியதாக எங்கள் அர்ப்பணிப்பு எப்போதும் விரிவடைந்துள்ளது. மருத்துவ சிறப்பை வளர்ப்பு சூழலுடன் இணைக்கும் இந்த தனித்துவமான வசதியை உருவாக்குவதன் பின்னணியில் உள்ள யோசனை, வாழ்க்கையை கட்டுப் படுத்தும் நிலைமைகளை எதிர்கொள்பவர்களுக்கு இரக்கம் மற்றும் நோயாளியை மையமாகக் கொண்ட பராமரிப்பின் சுற்றுச் சூழல் அமைப்பை வழங்குவதாகும்" என்று கூறினார். உடல் பராமரிப்புடன் உணர்ச்சி மற்றும் ஆன்மீக நல்வாழ்வை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட இது, குணப்படுத்துதல் முழு நபரையும் தழுவ வேண்டும் என்ற எங்கள் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது - நோயை மட்டுமல்ல, என்று அவர் மேலும் கூறினார்.

இந்த தொடக்கத்திற்கு முன்னதாக தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய மணிப்பால் உயர் கல்வி அகாடமியின் துணை வேந்தர் லெப்டினன்ட் ஜெனரல் (டாக்டர்) எம்.டி. வெங்கடேஷ், வி.எஸ்.எம் (ஓய்வு), மணிப்பால் கூறினார், "எம்.எச்.ஆர்.சி என்பது சிறப்பு, பச்சாதாபம் மற்றும் கல்வி ரீதியாக வேரூன்றிய சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதற்கான எங்கள் நோக்கத்தை முன்னேற்றும் ஒரு முன்னோடி முயற்சியாகும். ஒரு மருத்துவக் கல்லூரி மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனை இரண்டையும் இணைத்துள்ள இந்தியாவின் ஒரே மருத்துவமனையாக, எதிர்கால பராமரிப்பாளர்களுக்கு பயிற்சி தளமாகச் செயல்படும் அதே வேளையில் மேம்பட்ட நோய்த்தடுப்பு சிகிச்சையை வழங்குவதில் இது தனித்துவமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த உயர் தாக்க முயற்சியின் மூலம் வழங்கப்படும் சேவைகள் கடுமையான மற்றும் வாழ்க்கையை கட்டுப்படுத்தும் நிலைமைகளை எதிர்கொள்ளும் நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்."

சுகாதார அறிவியல் துணைவேந்தர் டாக்டர் சரத் கே. ராவ், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துணைவேந்தர் டாக்டர் நாராயண சபாஹித், தலைமை இயக்க அதிகாரி டாக்டர் ரவிராஜா என்.எஸ்., எம்ஏஹெச்இ பதிவாளர் டாக்டர் கிரிதர் கினி, நோய்த்தடுப்பு மருத்துவம் மற்றும் துணை பராமரிப்பு துறை பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் நவீன் சாலின்ஸ், மணிப்பால் ஹாஸ்பிஸ் மற்றும் ரெஸ்பைட் சென்டர் (எம்ஹெச்ஆர்சி) இயக்குநர் டாக்டர் சீமா ராஜேஷ் ராவ் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

எம்ஹெச்ஆர்சி மற்ற மருத்துவமனை வசதிகளிலிருந்து வேறுபட்டது, ஏனெனில் அதன் தனித்துவமான மற்றும் மூலோபாய ரீதியாக மேம்பட்ட நோய்த்தடுப்பு சிகிச்சையை ஆராய்ச்சி மற்றும் கல்வியுடன் உள்ளடக்கியது. இந்த வசதி, புற்றுநோய் மற்றும் புற்றுநோய் அல்லாத நிலைமைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மருத்துவக் கல்லூரி மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனை இரண்டையும் இணைத்து இந்தியாவில் உள்ள ஒரே மருத்துவமனையாக உருவாக்கப்பட்டுள்ளது. எம்ஹெச்ஆர்சி, அடுத்த தலைமுறை நோய்த்தடுப்பு பராமரிப்பு நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்கும் அதே வேளையில் புதுமையான பராமரிப்பு மாதிரிகளை வழங்கும்.

# திருவல்லிக்கேணி பகுதியில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் விற்பனை செய்த 4 நபர்கள் கைது. 7 டிக்கெட்டுகள் பறிமுதல்.

சென்னை 27, ஏப்ரல் 2025: சென்னை, சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில், 25.04.2025 அன்று சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் சன் ரைசர்ஸ் ஹைதரபாத் அணிகளுக்கிடையே ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. மேற்படி கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை கள்ள சந்தையில் (பிளாக் மார்க்கெட்) விற்பனை செய்பவர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப, அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், உயர் அதிகாரிகளின் நேரடி மேற் பார்வையில், காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு கண்காணித்து வந்தனர்.

டி-1 திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை காவல் குழுவினர் 25.04.2025 அன்று சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான பட்டாபிராம் கேட், வாலாஜா சாலை, பெல்ஸ் ரோடு, வாலாஜா ரோடு சந்திப்பு, விக்டோரியா ஹாஸ்டல் சாலை சந்திப்பு, சேப்பாக்கம் இரயில்வே ஸ்டேஷன் ஆகிய இடங்களில் தீவிரமாக கண்காணித்து, அங்கு கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டுகளை சட்டவிரோதமாக கள்ள சந்தையில் (பிளாக் மார்க்கெட்) அதிக விலைக்கு விற்பனை செய்தது தொடர்பாக 4 வழக்குகள் பதிவு செய்து, 1. டில்லி பாபு, வ/33, த/பெ.லக்ஷ்மிபதி, புரசைவாக்கம், சென்னை 2.இம்ரான், வ/32, த/பெ.நட்ராஜ், புதுப்பேட்டை, சென்னை 3.கார்த்திக், வ/31, த/பெ. வேணு கோபால், அண்ணா நகர், சென்னை 4.சுரேந்தர், வ/23, த/பெ.சுகுமார், காரனோடை, சென்னை ஆகிய 4 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 4 நபர்களிடமிருந்து கள்ள சந்தை மூலம் விற்பனை செய்ய வைத்திருந்த 7 டிக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மேற்படி 4 நபர்கள் மீதும், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# 15 வது வேலைவாய்ப்பு விழாவில் 976 பேருக்கு நியமனக் கடிதங்களை இபிஎப்ஓ வழங்கியது

சென்னை 27, ஏப்ரல் 2025: நாடு முழுவதும் 47 இடங்களில் இன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு விழாவின் 15-வது பதிப்பில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு பெருமையுடன் பங்கேற்றது. பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி மூலம் உரையாற்றிய இந்த நிகழ்ச்சியில், இபிஎஃப்ஓ உட்பட பல்வேறு அரசுத் துறைகளில் புதிதாக சேர்க்கப்பட்ட 51,000 க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு நியமனக் ஆணைகள் விநியோகிக்கப்பட்டன.

இந்தக் குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக, இந்தியா முழுவதும் கோடிக் கணக்கான சந்தாதாரர்களுக்கு சமூக பாதுகாப்பு சேவைகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்து, அதன் பணியாளர்களை வலுப்படுத்த புதிதாக பணியமர்த்தப்பட்டவர்களை இபிஎஃப்ஓ வரவேற்கிறது. 345 கணக்கு அலுவலர்கள் / அமலாக்க அதிகாரிகள் மற்றும் 631 சமூக பாதுகாப்பு உதவியாளர்களுக்கு இன்று பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

புதிதாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டு நன்மைகளை வழங்கும் இபிஎஃப்ஓ-வின் பணிக்கு பங்களிப்பார்கள். கடந்த ஓராண்டில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு, 159 உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள், 84 இளநிலை மொழி பெயர்ப்பு அலுவலர்கள், 28 சுருக்கெழுத்தர்கள், 2674 எஸ்.எஸ்.ஏ.க்கள் ஆகியோரை தேர்வு செய்துள்ளது.

வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் தேச நிர்மாணத்திற்காக இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல் ஆகியவற்றுக்கான பிரதமரின் உறுதிப்பாட்டுடன் இந்த வேலைவாய்ப்பு விழா ஒத்துப்போகிறது. இபிஎஃப்ஓ-வின் பங்கேற்பு வெளிப்படையான மற்றும் தகுதி அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கான அதன் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, சேவை வழங்கலை மேம்படுத்த நவீனமயமாக்கப்பட்ட செயல்முறைகளை மேம்படுத்துகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# பேசின்பாலம் பகுதியில் தம்பியை கத்திரிக்கோலால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட அண்ணன் கைது.



சென்னை 27, ஏப்ரல் 2025: சென்னை, புளியந்தோப்பு, சிவராஜபுரம் 3வது தெருவில் வசித்து வரும் பார்த்திபன், வ/34, த/பெ.உதயகுமார், அவரது மனைவியை பிரிந்து வசித்து வருகிறார். பார்த்திபனுக்கும் அதே வீட்டில் வசிக்கும் அவரது அண்ணன் கண்ணன் என்பவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு, இந்நிலையில், 24.04.2025 அன்று இரவு பார்த்திபனுக்கும், அவரது அண்ணன் கண்ணனுக்கும் வாய் தகராறு ஏற்பட்ட போது, கண்ணன் கத்திரிக்கோலால் பார்த்திபனை தாக்கிவிட்டு தப்பிச் சென்றார். இரத்தக்காயமடைந்த பார்த்திபன் ஸ்டான்லி அரசு மருத்துவ மனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து பார்த்திபனின் மனைவி லாவண்யா என்பவர் கொடுத்த புகாரின் மீது, பி-4 பேசின் பாலம் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

பி-4 பேசின் பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி கண்ணன், வ/36, த/பெ.உதயகுமார், சிவராஜபுரம் 3வது தெரு, புளியந்தோப்பு, சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி கண்ணன் விசாரணைக்குப் பின்னர் 25.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# அபிராமபுரம் மற்றும் பேசின் பாலம் பகுதியில் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் வைத்திருந்த 2 நபர்கள் கைது. 40.1 கிலோ குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல்.

சென்னை 27, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல், இ-4 அபிராமபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் 24.04.2025 அன்று காலை, மந்தைவெளி பறக்கும் இரயில் நிலையம் அருகில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, அங்கு சாக்குப்பையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த சித்திரைபாண்டி, வ/38, த/பெ.ராமசாமி, என்.எஸ். கார்டன் 1வது தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 11.7 கிலோ எடை கொண்ட ஹான்ஸ் மற்றும் கூலிப் ஆகிய குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி சித்திரைபாண்டி மீது ஏற்கனவே 1 குட்கா வழக்கு உள்ளது தெரியவந்தது.

பி-4 பேசின் பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் 25.04.2025 அன்று காலை, புளியந்தோப்பு, குருசாமி நகர், கால்வாய் தெருவில் கண்காணித்து, அங்கு சட்ட விரோதமாக குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை செய்த சுரேஷ், வ/34, த/பெ.பரமசிவம், கெனால் தெரு, குருசாமி நகர், புளியந்தோப்பு, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 28.4 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், கூலிப் உள்ளிட்ட குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் சித்திரை பாண்டி மற்றும் சுரேஷ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# கடந்த 5 ஆண்டுகளில் சென்னை பெருநகர காவல்துறையினரின்பல்வேறு குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கொலை, கொள்ளை, வழிப்பறி, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருமளவு குறைந்துள்ளன.

சென்னை 27, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில், சென்னை பெருநகரில் சட்டம், ஒழுங்கை காப்பதிலும், முறையான ரோந்து கண்காணிப்பு பணி மூலம் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றவாளிகளை கண்காணித்து குற்றச் செயல்களை தடுக்கவும், குற்றங்களில் ஈடுபட்ட நபர்களை விரைந்து கண்டறிந்து கைது செய்து, நீதிமன்றங்களில் ஆஜர் செய்யவும், நீதிமன்ற வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனைகள் பெற்று தரவும் பல்வேறு குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கியமாக, கொலை, ஆதாய கொலை, போக்கிரிகள் பழி வாங்கும் கொலைகள், கொள்ளை, வழிப்பறி, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை தடுப்பதை முதன்மையாக கருத்தில் கொண்டு, காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான தனிப்படையினர் தங்களது காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தீவிரமாக கண்காணித்தும், முக்கிய இடங்களில் தடுப்புகள் அமைத்து வாகன சோதனைகள் மேற்கொண்டும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் தடுக்கப் பட்டு வருகின்றன.

மேலும், 2021ம் ஆண்டு 94 கொலை வழக்குகளும், 2022ல் 97 கொலை வழக்குகளும், 2023ம் ஆண்டு 102 கொலை வழக்குகளும், 2024ம் ஆண்டு 102 கொலை வழக்குகள் தாக்கலாகியுள்ளன. 2025ம் ஆண்டு ஏப்ரல் வரை 29 கொலை வழக்குகள் தாக்க லாகியும் அதில் 3 போக்கிரி கொலை குற்றங்கள் மட்டுமே நடந்துள்ளது. உரிய நடவடிக்கை மூலம் கொலை குற்றங்கள் குறைந்துள்ளன.

கொள்ளை வழக்குகளில் 2021ல் 15 வழக்குகளும், 2022ல் 11 வழக்குகளும், 2023ல் 17 வழக்குகளும், 2024ல் 13 வழக்குகளும் தாக்கலாகியுள்ள நிலையில், 2025ம் ஆண்டு 1 வழக்கு மட்டுமே தாக்க லாகியுள்ளது. உரிய நடவடிக்கை மூலம் கொள்ளை குற்றம் குறைக்கப்பட்டுள்ளது.

இதே போல வழிப்பறி வழக்குகளில் 2021ல் 392 வழக்குகளும், 2022ல் 405 வழக்குகளும், 2023ல் 325 வழக்குகளும், 2024ல் 258 வழக்குகள் தாக்கலாகியுள்ள நிலையில், 2025ல் 51 வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளது. உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மூலம் வழிப்பறி நிகழ்வு குற்றங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் 2021ல் 416 வழக்குகளும், 2022, 2023, 2024 ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கலான நிலையில், 2025ல் இதுவரை 326 வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப்பிரிவு துணை ஆணையாளர் தலைமையில், அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்கள் மூலம் உரிய நடவடிக்கைகள், விழிப்புணர்வுகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள்

தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வழக்குகளில் தொடர்ச்சியாக சாட்சிகளையும், எதிரிகளையும் ஆஜர்படுத்தி முக்கியத்துவம் தந்து அதனால் பல வழக்குகளில் நீதிமன்றங்களில் தண்டனை உறுதி செய்யப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர காவல் சரகங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள் அனைத்தும் முறையாக புகார்கள் பெறப்பட்டு உடனடி நடவடிக்கை எடுத்து நீதிமன்ற தண்டனை பெற்று தரும் முயற்சி தொடர்வதால் பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் காவல் துறையை எளிதில் அணுகி புகார்கள் தெரிவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

சென்னை பெருநகரில் காவல் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி, சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு மற்றும் குற்றப் பிரிவு காவல்துறையினருக்கு தகுந்த ஒருங்கிணைப்பு செய்வதற்காக, நுண்ணறிவுப்பிரிவு, ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு (ஓசியு), தீவிர குற்ற கண்காணிப்பு பிரிவு (எஸ்சிஎஸ்), குற்றவாளிகளின் வலையமைப்பை தொடர்ந்து கண்காணித்து, முக்கிய குற்றவாளிகள், சரித்திர பதிவேடு குற்றவாளிகள், பழைய குற்றவாளிகள் ஆகியோரை கண்காணித்து, சட்ட நடவடிக்கைகள் எடுத்து வரப்படுவதால், குற்றங்கள் குறைந்துள்ளன.

# போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவின் (ஏஎன்ஐயு) தொடர் நடவடிக்கையால் மடிப்பாக்கம் பகுதியில் மெத்தபெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 2 நபர்கள் கைது.

சென்னை 27, ஏப்ரல் 2025:போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (ஏஎன்ஐயு) யூனிட்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், ஏஎன்ஐயு யூனிட் படையினர் மற்றும் எஸ்-7 மடிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் 25.04.2025 அன்று மடிப்பாக்கம், கூட்ரோட்டில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 2 நபர்களை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் மெத்த பெட்டமைன் என்ற போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், எஸ்-7 மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்ட விரோதமாக மெத்த பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 1.ரஞ்சித்குமார், வ/23, த/பெ.பாலமுருகன், அழகப்பா நகர், மதுரை 2.விக்னேஷ்வரன், வ/22, த/பெ.மாணிக்கவாசகம், சூரக்கோட்டை தாலூகா, தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 7 கிராம் மெத்த பெட்டமைன் மற்றும் 2 செல் போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி ரஞ்சித்குமார் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும், விக்னேஷ்வரன் தனியார் பொறியியல் கல்லூரியில் படித்து வருவதும் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் 25.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# உடான் திட்டம்: இந்தியாவை இணைக்கிறது

சென்னை 27, ஏப்ரல் 2025:சாமானிய மக்களுக்கு குறைந்த செலவில் விமானப் பயணம் என்ற கனவு முதல் உடான் விமானத் துடன் உறுதியான வடிவம் பெறத் தொடங்கியது. இந்த விமானம் ஏப்ரல் 27, 2017 அன்று சிம்லாவின் அமைதியான மலைகளையும் தில்லியின் பரபரப்பான பெருநகரத்தையும் இணைக்கும் வகையில் தொடங்கியது. 2025, ஏப்ரல் 27, அன்று, இந்திய விமானப் பயணத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்ற எண்ணற்ற குடிமக்களுக்கு வானத்தைத் திறக்கின்ற இந்த மைல்கல் நிகழ்வு 8 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

தேசிய சிவில் விமானப் போக்கு வரத்துக் கொள்கை 2016 இன் கீழ், 10 ஆண்டு தொலை நோக்குப் பார்வை யுடன், சந்தை சார்ந்த ஆனால் நிதி ரீதியாக ஆதரிக்கப்படும் மாதிரி நடவடிக்கை மூலம் 2-ம் அடுக்கு மற்றும் 3-ம் அடுக்கு நகரங்களை இணைக்கும் கருத்தாக் கத்துடன் உடான் திட்டம் உருவாக்கப் பட்டது. இந்தத் திட்டம் சலுகைகள் மற்றும் செயல்திறன் இடைவெளி நிதி மூலம் பிராந்திய வழித்தடங்களில் செயல்பட விமான நிறுவனங்களை ஊக்குவித்தது, குறைந்த கட்டணங்கள் மற்றும் மேம்பட்ட அணுகலை உறுதி செய்தது.

2016-ல் உடான் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து ஒவ்வொரு சுற்றும் இந்தியாவின் பிராந்திய விமான இணைப்பை என்ற நோக்கத்தையும் அளவையும் விரிவு படுத்துகிறது.

முக்கிய கட்டங்களின் சுருக்கம் கீழே: உடான் 1.0 (2017) முதல் உடான் விமானம் ஏப்ரல் 27, 2017 அன்று (சிம்லா-தில்லி) புறப்பட்டது.

பாதுகாப்பு: 5 விமான நிறுவனங் களுக்கு 70 விமான நிலையங்களுக்கு 128 வழித்தடங்கள் வழங்கப்பட்டன,

இதில் 36 புதிய விமான நிலையங்கள் அடங்கும். உடான் 2.0 (2018) 73 குறைந்த சேவை மற்றும் சேவை இல்லாத விமான நிலையங்களை உள்ளடக்கிய திட்டத் தை விரிவுபடுத்தியது.

உடான் 3.0 (2019) சுற்றுலா அமைச்ச கத்துடன் ஒருங் கிணைந்து சுற்றுலா வழித்தடங்களை அறிமுகப்படுத்தியது.

நீர் விமான நிலையங்களை இணைக்க கடல் விமான செயல் பாடுகளை இணைத்தது.

வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள பல வழித்தடங்கள் திட்டத்தின் கீழ் வந்தன.

உடான் 4.0 (2020) மலைப்பாங்கான பகுதிகள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் தீவுப் பிரதேசங்களில் கவனம் செலுத்தியது.

ஹெலிகாப்டர் மற்றும் கடல் விமான சேவைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

2025, அக்டோபரில் உடான் அதன் 9-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்போது, இந்தத் திட்டம் குறிப்பிடத் தக்க மைல்கற்களை எட்டியுள்ளது.

1. இந்தியா முழுவதும் 90 விமான நிலையங்களை இணைக்கும் 1.625 வழித்தடங்கள் இயக்கப்பட்டன. (15 ஹெலிகாப்டர் நிலையங்கள் & 2 நீர் விமான நிலையங்கள் உட்பட).

2. குறைந்த கட்ட ணத்தில் பிராந்திய விமானப் பயணத்தால் 1.49 கோடிக்கும் அதிகமான பயணிகள் பயனடைந்தனர்.

3.நாடு முழுவதும் 3. 3 லட்சம் உடான் விமானங்கள் இயக்கப் பட்டன.

4 விமான நிலைய நெட்வொர்க் 74 (2014) முதல் 159 (2024) வரை விரிவடைந்தது.

5. வடகிழக்கில் 20 உட்பட 102 புதிய வழித் தடங்கள் தொடங்கப் பட்டன; 2024-25 இல் (இன்று வரை) 66 சேர்க்கப் பட்டன.

6.2025, மார்ச் 13, வரை விலையுயர்வு இடைவெளி நிதியாக 4,023.37 கோடி அமெரிக்க டாலர் வழங்கப்பட்டது

7. பிராந்திய வர்த்தகம், சுகாதார அணுகல் மற்றும் சுற்றுலா மேம்படுத்தப் பட்டது; கஜுராஹோ, அமிர்தசரஸ், அஜ்மீர், தியோகர் மற்றும் வடகிழக்கு இந்தியா போன்ற முக்கிய இடங் களுக்கு மேம்படுத் தப்பட்ட விமான இணைப்பு.

8 ஃப்ளைபிக், ஸ்டார் ஏர், இந்தியாஒன் ஏர்,ஃப்ளை91 போன்ற பிராந்திய விமான நிறுவனங்களின் எழுச் சிக்கு வழிவகுத்தது. விமானப் பயணத்தை மேலும் உள்ளடக் கியதாக மாற்றும் தொலை நோக்குப் பார்வைக்கு ஏற்ப, கொல்கத்தா மற்றும் சென்னை விமான நிலையங்களில் மலிவு விலையில் யாத்ரி கஃபேக்கள் தொடங்கப் பட்டுள்ளன. இவை ரூ.10க்கு தேநீர் மற்றும் ரூ.20க்கு சமோசாக்கள் என குறைந்த விலையில் தரமான உணவை வழங்குகின்றன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# வேலைவாய்ப்பு விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரை

சென்னை 27, ஏப்ரல் 2025: தேச நிர்மாணத்தில் இளைஞர் கள் தீவிரமாக பங்களிக்கும் போது, நாடு விரைவான வளர்ச்சியை எட்டுவதுடன், உலக அரங்கில் அங்கீகாரத்தையும் பெறுகிறது: பிரதமர்

இன்று இந்திய இளைஞர்கள் தங்களது அர்ப்பணிப்பு மற்றும் புதுமைப் படைப்பு மூலம் நம்மிடம் உள்ள அளப்பரிய ஆற்றலை உலகிற்கு நிரூபித்துள்ளனர்: பிரதமர்

இந்த பட்ஜெட்டில், 'மேக் இன் இந்தியா' முன்முயற்சியை ஊக்குவிக்கவும், இந்திய இளைஞர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகளை உருவாக்கும் வாய்ப்பை வழங்கவும் உற்பத்தி இயக்கத்தை அரசு அறிவித்துள்ளது: பிரதமர்

உற்பத்தித் திட்டம் நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும், சிறு தொழில்முனைவோர்களுக்கும் ஆதரவளிப்பதோடு, நாடு முழுவதும் புதிய வேலைவாய்ப்புகளையும் வழங்கும்: பிரதமர்

உலக ஒலி, ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சிமாநாடு (வேவ்ஸ்) 2025-ஐ மும்பை விரைவில் நடத்தவுள்ளது. இந்த நிகழ்வு நாட்டின் இளைஞர்களை அதன் மையத்தில் கொண்டு வருவதுடன், முதல் முறையாக இளம் படைப்பாளர்களுக்கு இது போன்ற மேடையை வழங்குகிறது: பிரதமர்

ஊடகம், கேமிங், பொழுதுபோக்கு ஆகியவற்றில் புதுமையாளர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த ளுக்கு, வேவ்ஸ் முன்பு காணப்படாத வாய்ப்பாக அமையும்: பிரதமர்

அதிகாரத்துவம் முதல் விண்வெளி மற்றும் அறிவியல் வரையிலான துறைகளில் இந்தியாவின் பெண்கள் சக்தி புதிய உயரங்களை எட்டியுள்ளது. கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது: பிரதமர்

வேலைவாய்ப்பு மேளாவில் உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட 51,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு காணொலிக் காட்சி மூலம் பணி நியமன ஆணைகளை இன்று வழங்கினார். திரண்டிருந்தவர்களிடையே உரையாற்றிய அவர், மத்திய அரசின் பல்வேறு துறைகளில் இந்த இளைஞர்களுக்கான புதிய பொறுப்புகளின் தொடக்கத்தை இன்று குறிக்கிறது என்று குறிப்பிட்டார். நாட்டின் பொருளாதார கட்டமைப்பை மேம்படுத்துதல், உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்துதல், நவீன உள்கட்டமைப்பை நிர்மாணிப்பதில் பங்களிப்பு செய்தல், தொழிலாளர்களின் வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வருவது ஆகியவை அவர்களின் கடமைகளில் அடங்கும் என்று அவர் குறிப் பிட்டார். அவர்கள் தங்கள் பொறுப்புகளை நேர்மையுடன் நிறைவேற்றும் தன்மை, வளர்ந்த நாடாக மாறுவதை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் தெரிவித்தார். இந்த இளைஞர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் தங்கள் கடமைகளை மேற்கொள்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்

"எந்தவொரு நாட்டின் முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கான அடித்தளம் அதன் இளைஞர்களின் கையில் உள்ளது, தேச நிர்மாணத்தில் இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்கும்போது, தேசம் விரைவான வளர்ச்சியை அனுபவித்து, உலக அரங்கில் அதன் அடையாளத்தை நிறுவுகிறது" என்று திரு மோடி கூறினார். "இந்தியாவின் இளைஞர்கள் தங்கள் கடின உழைப்பு மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் மூலம் தங்கள் மகத்தான திறனை உலகிற்கு வெளிப்படுத்தி வருகின்றனர்" என்று அவர் மேலும் கூறினார். நாட்டின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலை வாய்ப்புகள் தொடர்ந்து வளர்ந்து வருவதை ஒவ்வொரு அடியிலும் அரசு உறுதி செய்கிறது என்றார் அவர். திறன் இந்தியா, புத்தொழில் இந்தியா, டிஜிட்டல் இந்தியா போன்ற முன்முயற்சிகள் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சாரங்கள் மூலம், இந்திய இளைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஒரு திறந்த தளத்தை அரசு வழங்குகிறது. இந்த முயற்சிகளின் விளைவாக, இந்தத் தசாப்தத்தில், தொழில்நுட்பம், தரவு, கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் இந்திய இளைஞர்கள் நாட்டை முன்னணிக்கு கொண்டு வந்துள்ளனர் என்று திரு மோடி குறிப்பிட்டார். யுபிஐ, அரசு இ-சந்தை போன்ற டிஜிட்டல் தளங்களின் வெற்றியை அவர் எடுத்துரைத்தார், இது டிஜிட்டல் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் மாற்றங்களை இளைஞர்கள் எவ்வாறு வழிநடத்துகிறார்கள் என்பதை நிரூபிக்கிறது. நிகழ்நேர டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் இந்தியா தற்போது உலகிலேயே முன்னணியில் உள்ளது என்றும், இந்த சாதனையில் கணிசமான பங்கு இளைஞர்களையே சாரும் என்றும் அவர் மேலும் கூறினார்.

"இந்தப் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட உற்பத்தி இயக்கம், 'மேக் இன் இந்தியா' முன்முயற்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண் டுள்ளதுடன், இந்தியாவின் இளைஞர்களுக்கு உலகளவில் தரமான தயாரிப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. இந்த முயற்சி நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான எம்.எஸ்.எம்.இ மற்றும் சிறு தொழில் முனைவோருக்கு ஆதரவளிப்பது மட்டுமல்லாமல், நாடு முழுவதும் புதிய வேலை வாய்ப்புகளையும் வழங்கும்" என்று குறிப்பிட்ட பிரதமர், இது இந்தியாவின் இளைஞர்களுக்கு முன்னெப்போதும் இல்லாத வாய்ப்புகளின் நேரம் என்று கூறினார்.

உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா நீடிக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் சமீபத்தில் கூறியதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த வளர்ச்சி பல அம்சங்களைக் கொண்டுள்ளது என்று கூறிய அவர், வரவிருக்கும் நாட்களில் அனைத்து துறைகளிலும் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பு மிக முக்கியமானது என்று வலியுறுத்தினார். சமீப காலங்களில், மோட்டார் வாகனம் மற்றும் காலணித் தொழில்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் புதிய சாதனைகளை எட்டியுள்ளன, இளைஞர்களுக்கு கணிசமான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன என்று பிரதமர் சுட்டிக்காட்டினார். முதல் முறையாக, காதி மற்றும் கிராமத் தொழில்கள் சார்ந்த பொருட்கள் ரூ.1.70 லட்சம் கோடி வருவாயைத் தாண்டியுள்ளன. குறிப்பாக ஊரகப் பகுதிகளில் லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன என்பதையும் அவர் எடுத்துரைத்தார். உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் சமீபத்திய சாதனை குறித்து குறிப்பிட்ட அவர், 2014 ஆம் ஆண்டுக்கு முன்பு, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மூலம் ஆண்டுக்கு 18 மில்லியன் டன் சரக்குகள் மட்டுமே கொண்டு செல்லப்பட்டன என்று குறிப்பிட்டார். இந்த ஆண்டு, சரக்கு போக்குவரத்து 145 மில்லியன் டன்களைத் தாண்டியுள்ளது. இந்த திசையில் இந்தியாவின் தொடர்ச்சியான கொள்கை வகுப்பது மற்றும் முடிவுகளை எடுப்பதே இந்த வெற்றிக்கு காரணம் என்று அவர் கூறினார். நாட்டில் தேசிய நீர்வழிகளின் எண்ணிக்கை வெறும் 5 சதவீதத்திலிருந்து 110 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும், இந்த நீர்வழிகளின் செயல்பாட்டு நீளம் சுமார் 2,700 கிலோ மீட்டரிலிருந்து கிட்டத்தட்ட 5,000 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். இந்த சாதனைகள் நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

"மும்பை விரைவில் உலக ஒலி, ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடு (வேவ்ஸ்) 2025-ஐ நடத்தும். இந்த நிகழ்வு இளைஞர்களை அதன் மையத்தில் வைக்கிறது, இளம் படைப்பாளர்களுக்கு முதல் முறையாக அத்தகைய தளத்தை வழங்குகிறது.

இந்த உச்சிமாநாடு ஊடகம், கேமிங் மற்றும் பொழுதுபோக்கு துறைகளில் புதுமையாளர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த முன்னெப்போதும் இல்லாத வாய்ப்பை வழங்குகிறது" என்று திரு மோடி கூறினார்.



# சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின்பேரில், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தர தலைமறைவாக இருந்து வந்த நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகள் 1,258 நபர்கள் கடந்த 01.01.2025 முதல் 22.04.2025 காலத்திற்குள் அதிரடியாக கைது.

சென்னை 27, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களில் உள்ள வழக்குகளில், குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகவுள்ள, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 1258 குற்றவாளிகளை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பிடியாணைகள் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பல்வேறு குற்ற நிகழ்வுகளில் தொடர்புடைய எதிரிகள் வழக்குகளில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் சென்றவர்கள் காவல் நிலைய விசாரணை முடித்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்திய நிலையில் வழக்குகளின் எதிரிகள் தலைமறைவாகி பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி வழங்குவதில் பெரிதும் தாமதம்பட்டு வந்த காவல் நிலைய வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மாண்புமிகு நீதிமன்றங்களில் பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் இருந்தவர்களை சென்னை பெருநகர காவல் துறையின் கூடுதல் ஆணையாளர்கள் வடக்கு, தெற்கு மற்றும் 4 சென்னை காவல் மண்டல இணை ஆணையாளர்கள் மேற்பார்வையில் பல்வேறு தனிப் படைகள் அமைக்கப் பட்டு, காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான தனிப்படையினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் கிழக்கு மண்டலத்தில் 414 குற்றவாளிகளும், தெற்கு மண்டலத்தில் 224 குற்றவாளிகளும், வடக்கு மண்டலத்தில் 288 குற்றவாளிகளும், மேற்கு மண்டலத்தில் 292 குற்றவாளிகளும், மத்திய குற்றப்பிரிவில் 40 குற்றவாளிகளும் என மொத்தம் 1,258 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து நிலுவையில் இருந்து வரும் நீதிமன்ற விசாரணை வழக்குகள் முன்னேற்றம் குறித்து வாரம் தோறும் உயரதிகாரிகள் உரிய விபர ஆய்வு கூட்டம் நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதி கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல கடந்த 2024 வருடம் கிழக்கு மண்டலத்தில் 1,146 குற்றவாளிகளும், தெற்கு மண்லத்தில் 869 குற்றவாளிகளும், வடக்கு மண்டலத்தில் 1,392 குற்றவாளிகளும், மேற்கு மண்டலத்தில் 1,748 குற்றவாளிகளும், மத்திய குற்றப்பிரிவில் 434 குற்றவாளிகளும் என மொத்தம் 5,589 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டது.

மேலும் கடந்த 2000 முதல் 2012 ஆண்டு வரை காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, வழிப்பறி, கொலை முயற்சி போன்ற முக்கிய குற்ற வழக்குகளில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல், தலைமறைவாக உள்ள பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளில் கொலை வழக்கில் தொடர்புடைய 9 குற்றவாளிகளும், ஆதாயக் கொலை வழக்கில் தொடர்புடைய 4 குற்றவாளிகளும், கொள்ளை வழக்கில் 1 குற்றவாளியும், வழிப்பறி வழக்கில் 27 குற்றவாளிகளும், கொலைமுயற்சி வழக்குகளில் 25 குற்றவாளிகளும் என மொத்தம் 66 வெவ்வேறு காவல் நிலைய முக்கிய வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். குறிப்பாக பி-5 எம்.கே.பி நகர் காவல் நிலைய கொலை முயற்சி வழக்கில் 2020 ஆண்டு முதல் தலைமறைவாக இருந்து வந்த ஏ+ வகை சரித்திரப்பதிவேடு போக்கிரி சோமசுந்தரம் (எ) சோமு என்பவரை 13.03.2025 அன்று கைது செய்தும், தி-4 மதுரவாயல் காவல் நிலைய கொலை வழக்கிலும், ஹெச்-3 தண்டையார்பேட்டை திருட்டு வழக்கிலும் 03.03.2025 முதல் தலைமறைவாக இருந்து வந்த ஏ வகை சரித்திரப்பதிவேடு போக்கிரி ரேடியோ விஜய் என்பவரை 15.04.2025 அன்று கைது செய்தும், எம்-5 காவல்நிலைய கொலை வழக்கில் 08.08.2021 முதல் தலைமறைவாக இருந்து வந்த ஏ வகை சரித்திரப்பதிவேடு போக்கிரி கனகு (எ) கனகராஜ் என்பவரை 21.01.2025 அன்று கைது செய்தும், ஆர்-7 கே.கே.நகர் காவல் நிலையம், செவ்வாய் பேட்டை காவல் நிலையம் கொலை வழக்குகளிலும், பி-1 புளியந்தோப்பு காவல் நிலைய வழிப்பறி வழக்கிலும் 12.01.2020 முதல் தலைமறைவாக இருந்து வந்த ஏ+ வகை சரித்திரப்பதிவேடு போக்கிரி சரவணன் (எ) பாம் சரவணன் என்பவர் 15.01.2025 அன்று தனிப்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டது.

# தேசிய தொழில் பெருவழித்தட மேம்பாட்டுக் கழகத்துக்கு தொழில் மேம்பாட்டு விருது

சென்னை 27, ஏப்ரல் 2025: கேரள மாநிலத்தின் முன்னணி செய்தி நாளிதழான ஜன்மபூமி தினசரி ஏடு ஏற்பாடு செய்த நிகழ்வின் போது தேசிய தொழில் பெருவழித்தட மேம்பாட்டுக் கழகத்திற்கு (என்.ஐ.சி.டி.சி) தொழில் மேம்பாட்டு விருது வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மத்திய கனரக தொழில்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் எஃகுத் துறை இணையமைச்சர் திரு. பூபதி ராஜு சீனிவாச வர்மா கலந்து கொண்டார். இந்தியா முழுவதும் அதிநவீன பசுமை தொழில் பொலிவுறு நகரங்களை உருவாக்குவதில் மத்திய அரசின் உறுதியான உறுதிப்பாட்டை எடுத்துரைத்தார்.

திரு வர்மா தமது உரையின் போது, பாலக்காட்டில் ஒருங்கிணைந்த உற்பத்தி பூங்காவின் (ஐஎம்சி) உருமாறும் திறனைப் பாராட்டினார்,

இந்தத் திட்டம் கேரளா மற்றும் நாட்டின் பரந்த தெற்கு பிராந்தியத்தின் உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை நிலப்பரப்பை மாற்றியமைக்க தயாராக உள்ளது என்று கூறினார்.

இந்த நிகழ்வில் தேசிய தொழில்துறை பெருவழித்தட மேம்பாட்டு திட்டத்தை மையமாகக் கொண்ட ஒரு தொழில்நுட்ப அமர்வும் இடம்பெற்றது,

இது வரவிருக்கும் பாலக்காடு தொழில் பொலிவுறு நகரத்தின் (ஸ்மார்ட் சிட்டி) கண்ணோட்டம், திட்டமிடல் மற்றும் முன்னேற்றம் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளை வழங்குகிறது.

பாலக்காடு தொழில் பொலிவுறு நகரம், புதுசேரி சென்ட்ரல், புதுசேரி மேற்கு மற்றும் கண்ணம்ப்ரா முழுவதும் 1,710 ஏக்கர் பரப்பளவில், கேரளாவின் தொழில்துறை வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.

பாலக்காடு நகரத்திலிருந்து 21 கிமீ தொலைவிலும், கொச்சியிலிருந்து 120 கிமீ தொலைவிலும், கோயம்புத்தூரிலிருந்து 50 கிமீ தொலைவிலும் அமையவுள்ள இந்தத் திட்டம், மாநிலங்களுக்கு இடையேயான தடையற்ற இணைப்பு மற்றும் குறிப்பிடத்தக்க தளவாட நன்மைகளை வழங்குகிறது, இது தென்னிந்தியாவின் முக்கிய தொழில்துறை நுழைவாயிலாக நிலைநிறுத்தப் பட்டுள்ளது.

சாலை, ரயில் மற்றும் விமானம் வழியாக வலுவான பன்மாதிரி இணைப்புடன், நகரம் உயர்தர முதலீடுகளை ஈர்க்கவும், பிராந்திய வேலைவாய்ப்பு மற்றும் கண்டுபிடிப்புகளை இயக்கவும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

முக்கிய திட்ட மைல்கற்கள் பின்வருமாறு:

தேவையான நிலத்தில் 81% ஏற்கனவே உள்ளது.

ஜனவரி 01, 2025 அன்று வழங்கப்பட்ட அனைத்து நிலப் பகுதிகளுக்கும் சுற்றுச்சூழல் அனுமதி.

திட்ட மேலாண்மை மற்றும் நிர்மாண ஆலோசகருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தக் கடிதம்.

பொறியியல் கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

தொழில் மேம்பாட்டு நிகழ்வில் என்.ஐ.சி.டி.சி.யின் அங்கீகாரம், இந்தியாவின் தொழில்துறை மாற்றத்தை ஊக்குவிப்பதில் அதன் முக்கியப் பங்கை எடுத்துக் காட்டுகிறது. ஞூலகளாவிய உற்பத்தி மற்றும் தளவாட அரங்கில் நாட்டின் போட்டித் தன்மையை மேம்படுத்துகிறது.